நியாயவிலைக் கடைகள்

* 333 வின—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு –வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

தமிழகத்தில் ஒவ்வொரு ஆதித்திராவிடர்கள் வசிக்கும் காலனியிலும், நியாயவிலைக் கடைகளை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆதித்திராவிடர்கள் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, சகலத் துறைகளிலும் அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு எல்லாப் பிரச்சினைகளிலும் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அவர்களுக்கு நியாய விலைக் கடைகளை அமைக்காவிட்டாலும், படி அரிசித் திட்டத்தையாவது அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது சில இடங்களில் ஸ்டாசுடரி ரேஷன், இன்பார்மல் ரேஷன் போன்ற முறைகள் இருந்து வருகின்றன. அதுவல்லாமல், வேறு எங்காவது குடும்பக் கார்டு முறை தேவை என்றால், அதை மாவட்டக் கலெக்டர் நிலைமைக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்கிறார்கள். உணவுப் பொருள்கள் அரிஜனங்களுக்குக் கொடுக்கவில்லை என்கிற வாதமே தவறானது. எங்கெல்லாம் ஸ்டாசுடரி ரேஷன் இருக்கிறதோ, அங்கெல்லாம் அரிசன மக்கள் அளவு அரிசியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது அரிசனக் காலனிக்குத் தேவை என்று இருந்தால், அவசியம் என்றிருந்தால், அதைக் கலெக்டர்மூலமாக எழுதியனுப்பினால், அங்கேயிருக்கும் இன்றியமையாத் தன்மைக்கு ஏற்றவாறு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–00

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காரணத்தால், தருமபுரி ஜில்லாவிலே, புஞ்சை தானியங்கள்தான் சாகுபடி செய்யப்படுகின்றன. அதுவும் விவசாயக் கூலிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, புஞ்சை தானியத்தை வினியோகம் செய்ய சர்க்கார் முன் வருமா? எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை.

திரு கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, கடற்கரை ஓரப் பகுதியிலும், மணற்பாங்கான பகுதியிலும் வாழும் மீனவர்களும் மற்ற இன மக்களும் விவசாயத்தில் ஈடுபடவில்லை. எனவே, அங்குள்ள மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று இல்லாவிட்டாலும், விலைகளைக் கட்டுப்படுத்தி நியாய விலைக் கடைகளைத் திறக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : முன்பே சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நிலைமைகளைக் கண்டறிந்து, எங்கெங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம், அதற்கு எங்கெங்கே அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அடிக்கடி அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து வருகிறார்கள். அவர்களிடத்திலே அங்கத்தினர் நிலைமையை விளக்கினால், அதற்கான நியாயங்களைக் கூறினால் அதன் அவசியத்தைப் பொறுத்து, அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

Ban on service of cereal dishes

* 334 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(*a*) Whether it is a fact that the Government have withdrawn the ban on serving of cereal dishes in catering establishments and hotels after 5 p.m. on Mondays and Thursdays from April 14th (Tamil New Year day) 1967; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: (*a*) Yes;

(*b*) The staple food of the people in this State is rice. The ban on the service of meals made out of cereals after 5-00 p.m. on Mondays and Thursdays was causing a great deal of hardship to bachelors staying away from their homes and the floating population in towns, depending on hotels and other catering establishments for their food. Several representations were also received by Government against this ban. In order to obviate this difficulty, the Government withdrew the above ban by notifying the deletion of the relevant clause from the Madras Food (Restriction on Service of Meals by Catering Establishments) Order, 1965.

THIRU K. VINAYAKAM; Whereas the purpose of this ban on serving of cereal food dishes in the catering establishments on Mondays and Thursdays was the laudable purpose of conserving foodstuffs because of the shortage and not with any significance of fast, has the result of the removal of this ban resulted in foodstuffs accruing in large quantities in our State and, if so, is the Government giving more rations to the catering establishments now?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I cannot say that the stock has increased. But the demands of the hoteliers are taken into account and met according to the stock position.

Nellore rice

* 335 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Hon. Minister is aware that the so-called "Nellore rice" supplied through the rice ration shops in the City of Madras is not of good and pure Nellore rice variety?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தெரியும். சிறந்த ரக நெல்லூர் அரிசி வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் சென்னை வட்டார நிர்வாகி அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சமீபத்தில் ஆந்திர முதலமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்களின் கவனத்திற்கும் தமிழக உணவு அமைச்சரவர்கள் அதைக் கொண்டுவந்துள்ளார்.

THIRU K. VINAYAKAM: As a resident of Madras and drawing rice from the ration shop, I had the pleasure of purchasing this Nellore rice after the notification came into effect. Is the Government aware that it is anything but Nellore rice, it is Renigunta or Gudur rice, and is it a fact that the quality of rice is so bad that it cannot be classified with the Nellore rice?